# சிலப்பதிகாரத்தில் முருகக்கடவுள்

***முனைவர் இர. கற்பகம்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சு.நி.),
ம.தி.தா.இந்துக்கல்லூரி, திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15526586

## முன்னுரை

*ஆரம்ப காலங்களில் மனிதனும் விலங்கினங்களோடு காடுகளில் குகைகளிலும் மரங்களிலும் வாழ்ந்து வந்தான். இயற்கைப் பேரிடர்கள் அவனைச் சூழ்ந்தது. எனவே ஐம்பூதங்களை வழிபடலானான். அங்கேயே வழிபாடு தோன்றிவிட்டது. பின்பு காலங்கள் பல கடந்த நிலையில் முன்னோர் வழிபாட்டு முறையானது உருவானது. புராணங்களும் கடவுளர்களும் கட்டமைக்கப்பட்டனர். இத்தகைய வழிபாட்டு முறைமைகளை ஒரு நிறுவனமாக்க முயற்சித்த முயற்சிதான் சமயங்கள் ஆகும். ஒவ்வொரு சமயத்திற்கும் கொள்கைகள், நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு அவை பின்பற்றப்பட்டன. புராணங்களும், காப்பியங்களும் சமயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. காப்பியங்களில் ஐம்பெருங்காப்பியங்கள் ஐஞ்சிறு காப்பியங்கள் சமயம் சார்ந்த இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. சமணம், பௌத்தம் போன்ற சமயங்கள் தொன்மையான சமயங்களாகக் குறிப்பிடப் பெறுகின்றன. சிலப்பதிகாரம் சமயம் சார்ந்த காப்பியமாகக் கருதப்பெறுகின்றது. இத்தகைய சமணக் காப்பியத்தில் சைவக்கடவுள் முருகன் பற்றிய செய்திகள் பரவலாகக் காணப்பெறுகின்றன. இதனை ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.*

## முருகனின் வேறு பெயர்கள்

*முருகனின் வேறு பெயர்களாக ஆறுமுகன், குமரன், குகன், சரணவன், வேலன், கந்தன், செவ்வேள், சண்முகன், சுப்பிரமணியன், சேயோன், மயில்வாகனன் என பல பெயர்களில் இலக்கியங்களில் சுட்டப்பெறுகின்றன.*

## இலக்கியங்களில் முருகவழிபாடு

*புராண இலக்கியங்களில் முருகன் சிவபெருமானின் மகனாகக் குறிப்பிடப் பெறுகிறார். தொல்காப்பியர் சேயோன் என்றுக் குறிப்பிடுகிறார். தமிழ்ப் பண்பாட்டோடு இணைந்த கடவுளாக திருமுருகாற்றுப்படை மற்றும் பரிபாடல் ஆகிய நூல்கள் முருகனின் அத்தனைப் பெருமைகளையும் வெளிக்காட்டுகின்றன. முருகன் தமிழ்க் கடவுளாகவும், மலைக்கடவுளாகவும் பார்க்கப்படுகிறான். முருகன் சங்க இலக்கியங்களில் முருக வழிபாட்டுக்கென்று தனி இடம் உண்டு. தலைவி காதல் வயப்பட்டு தலைவனின் பிரிவால் உண்ணாமல் உறங்காமல் உடல்நலத்தின் கண் அக்கறை கொள்ளாமல் இருப்பாள். இதை தவறுதலாகப் புரிந்துகொண்ட தலைவியின் பெற்றோர் வேலன் மூலம் குறிபார்த்து வெறியாட்டை மேற்கொள்வர். முருகக் கோயிலின் பூசாரியே வேலன் எனப்படுகிறான். முருகனின் வேலினை இவர் கையில் கொண்டுள்ளமையால் வேலன் எனப்பட்டார். இந்த வெறியாட்டை குறவப்பெண்கள் நடத்தின செய்தியை திருமுருகாற்றுப்படை அறிவிக்கிறது. முருகன் வேலன் (பூசாரி) மீது அருள் கொண்டு இறங்கு குறி சொல்வார் என்பது நம்பிக்கை.*

இதனை வெறியார்தல், வெறியாடல், வெறியாட்டு போன்ற பெயர்களில் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. முருகனை 'சி வகுமரான்சு என பரிபாடலும், கலித்தொகை சுட்டிக்காட்டுகின்றது. திருமுருகாற்றுப்படை முருகனின் வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**சிலப்பதிகாரத்தில் முருகன்**

சங்க இலக்கியங்களில் முருகனின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் சமயம் சார்ந்த இலக்கியங்கள் அல்ல. ஆகவே முருகனைப் பற்றிய செய்திகள் இடம்பெறுவதில் வியப்பில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் முருகனைப் பற்றிய செய்திகள் இடம்பெறுவது தனிச் சிறப்புதான்.

''ஆலமர் செல்வன் புதல்வன்'' என்ற பாடலடியில் ஆலமரத்தடியில் அமர்ந்த சிவனின் புதல்வன் எனக் குறிப்பிடுகிறது. மேலும் ''அறுமுக ஒருவனோர் பெறுமுறை இன்றியும்'' (மனையறம்படுத்த காதை - 49) ஆறுதிருமுகத்தையுடைய ஒப்பில்லானாகிய முருகன் என்று இப்பாடலடி குறிப்பிட்டுள்ளது. கயிலை மலையை இருப்பிடமாகக் கொண்டவர் சிவன். சிவனது மகன் முருகன் என்பதை, ''கயிலை நன்மலையினை மகனை'' என்று குன்றக்குரவையில் குறிப்பிடப்பெறுகிறது.

**சரவணப்பொய்கை**

முருகன் கார்த்திகைப் பெண்களால் (அறுவர்) வளர்க்கப்பட்ட வளர்ப்பு மகன் என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. இதனையே சிலம்பில்,

**''முருகன் சரவணப் பொய்கையிலே தாமரை மலராகிய**
**பள்ளியறைக் கண் கார்த்திகைப் பெண்டீர் அறுவரின்**
**திருமுலைப் பாலை உண்டு வளர்ந்தான்''**

என்ற இப்பாடல் அடிகள் முருகன் சரவணப் பொய்கையில் வளர்ந்தான், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் என்பதை வெளிப்படுத்துகின்றது.

**முருகக் கோயில்கள்**

பண்டையக் காலந்தொட்டு முருகனுக்கு கோயில்கள் பல இருந்துள்ளன. சிலப்பதிகாரத்திலும் இச்செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**''ஆறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயில்''**

என்ற அடி இந்திரவிழா ஊர் எடுத்த காதையிலும்,

**''கோழிச்சேவல் கொடியோன் கோயிலும்''**

என்று ஊர்காண் காதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முருகன் கோயில்கள் பெரும்பாலும் மலையில் அமைந்திருக்கும். இதனை சிலப்பதிகாரத்திலும் காணமுடிகின்றது.

**''மாமலைக்குன்றம்''**

என்று குன்றக்குரவையிலும்,

**''நெடுவேள் குன்றம்''**

கட்டுரை காதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே''**

என்ற பாடலடிகள் திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்றம், திருவேரகம் ஆகிய தலங்கள் சிறப்பு பெற்றவை என்பதை அன்றே அறிவித்திருக்கிறது. இவைபோன்ற செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றன.

**முருகனின் அழகு**

''முருகு'' என்பதற்கு அழகு என்பது பொருள். முருகன் என்றால் ''அழகன்'' என்பதைக் குறிக்கும். இலக்கியங்கள் பன்னிரு கைகளை உடையவன் முருகன் எனக் குறிப்பிடுகின்றன. இதை சிலப்பதிகாரத்தில்,

**''அணி முகங்கள் ஓர் ஆறும், ஈறாறுகையும்**
**இணை யின்றித் தானுடையான் ஏந்தி வேலன்னே''**
**(குன்றக்குரவை 9:1-2)**

என்ற பாடல் அடிகள் ஆறுமுகமும், பன்னிருகையும், வேலன் என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது.

முருகன் கடம்ப மாலை அணிந்தவன் என்பதை,

**''கடம்பு சூடி'' (20.1)**

ஒவ்வொரு கடவுளருக்கும் ஒவ்வொரு வாகனம் உண்டு. முருகனின் வாகனமாக

மயில் குறிப்பிடப்பெறுகிறது. எனவே தான் மக்கட் பெயரில் பல பெயர்கள் மயிலோடு தொடர்புபடுத்தி வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மயிலை முருகனது வாகனமாகக் குறிப்பிடுகின்றது சிலப்பதிகாரம்,

**"பிணி முக மேற் கொண்டு"**

என்ற பாடலடியில் முருகன் பிணிமுகம் என்னும் யானையின் மீது ஊர்ந்து சென்றமையை இங்கு காணமுடிகின்றது.

முருகன் சேவற்கொடியை உடையவன் என்பதனை,

**"கோழி சேவற் கொடியோன்"**

**(ஊர்காண் காதை : 10)**

பாடலடி குறிப்பிடுகின்றது.

**கூத்து**

கருநிறக்கடலின் நடுவே ?? ரன் வேற்றுருவிலிருந்தவனைக் கொன்று அக்கடல் நடுவே திரையாகிய அரங்கத்தில் துடிகொட்டி ஆடிய கூத்து துடி என்ற ஆடலாகும் என்பதனை,

**"நீர்த்திரையரங்கத்து நிகர்த்து முன்னின்று**
**ஆர்த்திரங் கடந்தோன் ஆடிய துடியும்"**

**(குன்றக்குரவை)**

குறிப்பிடுகின்றது.

மேலும் மற்றொரு செய்தியாக,

**"கடல்வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்து ஆங்கு**
**அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்"**

கட்டுரைக் காதையில் இச்செய்தி இடம்பெறுகிறது. அரக்கன் ஒருவன் தேவர்களுக்கு துன்பம் தர முருகன் தேவர்களைக் காக்கும் பொருட்டு அரக்கனைக் கொன்றான். இதனால் தேவர்களின் அரசனான இந்திரனின் பாராட்டைப் பெற்றான் என்ற செய்தியை இதன் மூலம் அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சிலப்பதிகாரம் சமணம் சார்ந்த நூல் என்று குறிப்பிடப்பெறும் நூலாக விளங்குகிறது. இந்து சமணத்தின் பெருமைகளை மட்டுமே பேசாமல் சைவக் கடவுளான முருகனது பெருமைகளையும் விளக்குவதை இக்கட்டுரை ஆராய்ந்து விளக்கியுள்ளது. இளங்கோவடிகள் சமயம் கடந்து சிந்தித்துள்ளார் என்பது இதன் மூலம் புலனாகிறது.